12 - 8

# முதல் பருவ பொது தொகுத்தறித் தேர்வு – 2024

## ஆறாம் வகுப்பு

நேரம்: 2.00 மணி அறிவியல் மதிப்பெண்கள்:60

### பகுதி – அ

I சரியான விடையைத் தேர்ந்தெடு: 10x1=10

1. 7மீ என்பதை சென்டிமீட்டரில் மாற்றினால் கிடைப்பது ________
   அ) 70 செ.மீ ஆ) 7 செ.மீ இ) 700 செ.மீ ஈ) 7000 செ.மீ
2. அளவிடக்கூடிய அளவிற்கு ________ என்று பெயர்.
   அ) இயல் அளவீடு ஆ) அளவீடு
   இ) அலகு ஈ) இயக்கம்
3. வேகத்தின் அலகு ________
   அ) மீ ஆ) வினாடி இ) கிலோகிராம் ஈ) மீ/வி
4. தர்பூசணிப் பழத்தில் உள்ள விதைகளை ________ முறையில் நீக்கலாம்.
   அ) கைகளால் தெரிந்தெடுத்தல் ஆ) வடிகட்டுதல்
   இ) காந்தப் பிரிப்பு ஈ) தெளிய வைத்து இறுத்தல்
5. நீரை உறிஞ்சும் பகுதி ________ ஆகும்.
   அ) வேர் ஆ) தண்டு இ) இலை ஈ) பூ
6. குளம் ________ வாழிடத்திற்கு ஒரு உதாரணம்.
   அ) கடல் ஆ) நன்னீர் இ) பாலைவனம் ஈ) மலைகள்
7. உயிருள்ள பொருள்கள் அல்லது உயிரினங்களைப் பற்றி படிப்பது
   அ) உளவியல் ஆ) உயிரியல் இ) விலங்கியல் ஈ) தாவரவியல்
8. எந்த விலங்கு செவுள்கள் எனப்படும் சுவாச உறுப்பைப் பெற்றுள்ளது ?
   அ) மண்புழு ஆ) குள்ளநரி இ) மீன் ஈ) தவளை
9. ஸ்கர்வி ________ குறைபாட்டினால் உண்டாகிறது.
   அ) வைட்டமின் A ஆ) வைட்டமின் B இ) வைட்டமின் C ஈ) வைட்டமின் D
10. கணினியின் தந்தை என அழைக்கப்படுபவர் யார் ?
    அ) மார்ட்டின் லூதர் கிங் ஆ) கிரகாம் பெல்
    இ) சார்லி சாப்ளின் ஈ) சார்லஸ் பாபேஜ்

www.Padasalai.Net
CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – ஆ

II ஏதேனும் 15 வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி: 15x2=30

11. நிறை – வரையறு.

12. பொருள் நகரும் பாதையின் அடிப்படையிலான இயக்கங்களைக் கூறுக.

13. பின்வரும் அலகுகளை ஏறு வரிசையில் எழுதுக:

1 மீட்டர், 1 செண்டிமீட்டர், 1 கிலோமீட்டர், மற்றும் 1 மில்லிமீட்டர்

14. ஒப்புமையின் அடிப்படையில் நிரப்புக:–

1) பந்தை உதைத்தல் : தொடு விசை : : இலை கீழே விழுதல் ________

2) தொலைவு: மீட்டர் : : வேகம் : ________

15. கோடிட்ட இடத்தை நிரப்புக :–

1) பருப்பொருள் என்பது ________ ஆல் ஆனது.

2) ‘உப்புமா’வில் இருந்து ________ முறையில் மிளகாயினை நீக்கலாம்.

16. கலவைகளை நாம் ஏன் பிரித்தெடுக்க வேண்டும் ?

17. பொருத்துக

| பண்புகள் | | உதாரணம் |
|---|---|---|
| எளிதில் உடையக்கூடியது | – | உலோகத்தட்டு |
| எளிதில் வளையக்கூடியது | – | ரப்பர் வளையம் |
| எளிதில் இழுக்கலாம் | – | மண்பானை |
| எளிதில் வெப்பமடையும் | – | நெகிழி ஒயர் |

18. உணவுக் கலப்படம் என்றால் என்ன ?

19. சரியா அல்லது தவறா என எழுதுக. தவறாக இருப்பின் சரியான கூற்றை எழுதுக.

1) தாவரங்கள் நீரின்றி வாழ முடியும்.

2) பசுந்தாவரங்களுக்கு சூரிய ஒளி தேவை.

www.Padasalai.Net
CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



20. வாழிடம் என்பதை வரையறு.

21. ஆணிவேர் மற்றும் சல்லிவேர் தொகுப்புகளை ஒப்பீடு செய்க.

22. உங்களுடைய பள்ளித் தோட்டத்தில் உள்ள தாவரங்களைப் பட்டியலிடுக.

23. பின்வருவனவற்றை சரியான வரிசையில் எழுதுக.

1) இலைகள் – தண்டு – வேர் – மலர்கள்

2) நீராவிப்போக்கு – கடத்துதல் – உறிஞ்சுதல் – ஊன்றுதல்

24. பறவைகள் தங்கள் இரைகளை எவ்வாறு பிடிக்கின்றன ?

25. துருவக் கரடிகளில் காணப்படும் தகவமைப்புகளை எழுதுக.

26. பாம்புகளின் உடல் பகுதிகள் யாவை ?

27. பின்வரும் ஒப்புமைகளைப் பூர்த்தி செய்க:–

1) அரிசி : கார்போஹைட்ரேட் : : பருப்பு வகைகள் : ________

2) அயோடின் : முன்கழுத்துக் கழலை நோய் : : இரும்பு : ________

28. சரிவிகித உணவு – வரையறு.

29. நிரப்புக




30. ஏதேனும் நான்கு உள்ளீட்டுக் கருவிகளைக் கூறுக.

CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – இ

III எவையேனும் நான்கு கேள்விகளுக்கு விரிவாக விடையளி 4x5=20

31. வளைகோடுகளின் நீளத்தை அளக்க நீ பயன்படுத்தும் இரண்டு முறைகளை விளக்குக.

32. எடுத்துக்காட்டுகளைக் கொண்டு பூர்த்தி செய்க:

1) நேர்கோட்டு இயக்கம் ________

2) வளைவுப்பாதை இயக்கம் ________

3) வட்ட இயக்கம் ________

4) அலைவு இயக்கம் ________

5) ஒழுங்கற்ற இயக்கம் ________

33. வேர் மற்றும் தண்டு ஆகியவற்றின் பணிகளைப் பட்டியலிடுக.

34. ஒரு செல் உயிரிகளை பல செல் உயிரிகளிடமிருந்து வேறுபடுத்துக.

35. வைட்டமின்களையும் அவற்றின் குறைப்பாட்டால் ஏற்படும் நோய்களையும் அட்டவணைப்படுத்துக.

36. கண்ணினியின் பயன்பாடுகளை விரிவாகக் கூறுக.

***/***

www.Padasalai.Net

CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com